# இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் நற்செய்தியை அறிவித்தல்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் M2b யை வாசிக்கவும

இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல், அவரது பாவமன்னிப்பின் வாக்குறுதி, மனந்திரும்பிய பாவிக்கு நித்திய வாழ்க்கை ஆகிய ஆதி நற்செய்தியை கிறிஸ்தவர்கள் அறிவிக்கின்றனர் (லூக். 24:46-48).

## 1. நற்செய்தியை அறிவிக்க உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்துங்கள்.

சிறந்த முறையில் கூறப்படும் சுவிசேஷம் மக்களை மனம் திரும்ப வைத்து இயேசுவை விசுவாசிக்கச் செய்கிறது. நாம் ஆதி நற்செய்தியை மக்களிடம் கூறும் போது, அவர்கள் மனம் திரும்பி விசுவாசிக்கும் படியாக பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார்.

இயேசுவின் மூலமாக பாவ மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் கொண்டு வரும் நற் செய்தியை சிறந்த வகையில் அறிந்து கொள்ள கீழ்வரும் வேத வசனங்களை கவனமாக வாசிக்கவும்:

மரித்து உயிர்த்தெழுவதற்கு முன் இயேசு தம்மைப் பற்றி முன்னறிவித்தவைகளை **லூக்கா 18:31-34 ல் காண்க.**

- அவர் எங்கே மரிப்பார்?
- புறஜாதியார் அவருக்கு என்ன செய்வார்கள்?
- மூன்று நாட்களுக்குப் பின் இயேசு தாமே என்ன செய்வார்?

இயேசுவைக் குறித்து சில பெண்களிடம் இரண்டு தூதர்கள் என்ன கூறினர் என்பதை **லூக். 24:5-9 ல் காண்க:**

- பாவிகள் அவருக்கு என்ன செய்தனர்?
- அவர் எவ்வாறு இறந்தார்?
- மூன்று நாட்களுக்குப் பின் அவர் என்ன செய்தார்?

மரித்து உயிர்த்தெழுந்த பின் இயேசு தாமே என்ன அறிவித்தார் என்பதை **லூக். 24:36-48 ல் காண்க.**

- மரித்தோரில் இருந்து தாம் உண்மையிலேயே உயிரோடு எழுந்ததை இயேசு எவ்வாறு காட்டினார் (வச. 36-43).
- அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை எந்த பரிசுத்த புத்தகமும், பரிசுத்த மனிதனும் தீர்க்கத்தரிசனம் உரைத்தனர்? (வச. 44-45).
- பாடுபட்டு மூன்று நாட்கள் கழித்து அவர் தாமே என்ன செய்ய வேண்டும் (46).
- எங்குமுள்ள மக்களுக்கு விசுவாசிகளாகிய நாம் எதை அறிவிக்க வேண்டும் (வச. 47).
- இந்த விஷயங்களைக் குறித்து இயேசுவின் சீஷர்கள் செய்ய வேண்டியது என்ன? (48)

**யூத மக்களுக்குப் பேதுரு அறிவித்த செய்தியை அப். 2:21-24 & 37-38 ல் காண்க**

- இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி பேதுரு கூறியது என்ன (2:21-24).
- பாவ மன்னிப்பை பெற்று பரிசுத்த ஆவியைப் பெற யூதர்கள் என்ன செய்ய வேண்டும் (2:37-38).

**புறஜாதி மக்களுக்கு பவுல் அறிவித்த செய்தியை அப். 26:19-23 ல் காண்க**

- புறஜாதியார் (யூதர் அல்லாதவர்) செய்ய வேண்டியது (20). (யூதர்களும் புறஜாதியார்களும் ஆகிய இருவருமே இரட்சிக்கப் பட மனந் திரும்ப வேண்டும் என்றே தேவன் விதித்திருக்கிறார் என்பதை நோக்குக).

- இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் பற்றி (23).

**ஞானஸ்நானம் பெறும்போது ஆவிக்குரிய வகையில் நமக்கு நிகழ்வது என்ன என்பதை ரோமர் 6:8-14 ல் காண்க.**

- இயேசு மரித்த போது அவரோடு கூட வேறே யார் மரித்தது? (8-9).
- இயேசு உயிர்த்தெழுந்த போது அவரோடு கூட எழுந்தது யார்?

## 2. இந்த வாரத்தில் செய்ய வேண்டிய விஷயங்களை குறித்து உடன் ஊழியர்களுடன் ஆலேரசிக்கவும்

இயேசுவின் வல்லமையால் குணமாக்கப்பட்ட அல்லது இரட்சிக்கப்பட்ட அவிசுவாசிகளை சந்தித்து நற்செய்தியைப் பற்றியும், ரோமர் 5:10, 10:9-10 ல் உள்ள வாக்குத்தத்தத்தைப் பற்றியும் **விளக்குக.**

சுவிசேஷத்தை நீங்களும் உங்கள் உடன் ஊழியர்களும் எவ்வாறு விவரிக்கிறீர்கள் என்பது குறித்து **விவாதிக்கவும்.** இயேசு கொலை செய்யப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்பதையும், மக்கள் தங்கள் பழைய வாழ்க்கையை விட்டு விலகி இயேசுவை நம்பி புதிய வாழ்க்கை பெற வேண்டும் என்பதை எப்போதும் அறிவிக்க திட்டமிடவும்.

**படங்களை பயன்படுத்துக:** உங்கள் சமுதாயம் மத விஷயங்களில் படங்களை அனுமதித்தால், எளிய படங்களை வரைந்து அல்லது நகல் எடுத்து, சுவிசேஷம் அறிவிக்கும் போது அவைகளைக் காட்டி நீங்களும் விசுவாசிகளும் விளக்கலாம். பின் வரும் **எளிய படங்கள்** உதாரணமாகும்.

ஞானஸ்நானம் எடுத்துக் கொண்ட விசுவாசிகள், அதைரியமடைந்தோ, சோதனைக்குட்பட்டோ, சந்தேகமடைந்தோ காணப்பட்டால் அவர்களை சந்தித்து, ஒரு நீதியுள்ள வாழ்க்கையை வாழ்வதற்காக அவர்களுக்குள் கிறிஸ்துவின் வழிநடத்தும் வல்லமை இருப்பதை **விளக்கவும்** ரோமர் 6:1-14 ஐ உபயோகிக்கலாம்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் ஆலோசனை நடத்தவும்

மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ற **செயல்பாடுகளை** தெரிந்து கொள்க.

உயிர்த்தெழுந்த பின் இயேசு சீஷர்களுக்கு காணப்பட்ட நிகழ்ச்சியை எடுத்துக் கூறவோ அல்லது நடிக்கவோ செய்து லூக். 24 ல் நீங்கள் அறிந்து கொண்டதை விளக்கலாம். (பகுதி I) நீங்கள் அறிந்து கொண்டதை குறித்து கேள்விகள் கேட்கவும்.

**குழந்தைகள்** தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை, கேள்விகளை பெரியவர்களுக்கு வழங்கட்டும்.

கீழே வரும் படங்களுக்கு அடியில் காணப்படுவது போல, வல்லமையான செய்திகளை அவிசுவாசிகளுக்கு எடுத்துச் செல்லும்படி விசுவாசிகளை ஆயத்தப்படுத்துக.

**ì நீங்கள் அறிய வேண்டிய இரு விஷயங்களும், செய்ய வேண்டிய இரு விஷயங்களும்î**

**அறிந்து கொள்க:**

1) நீங்கள் செய்த அவமானகரமான விஷயங்களுக்காக தேவன் உங்களை நரகத்துக்குள் அனுப்புவார்.

2) உங்கள் அவமானகரமான விஷயங்களுக்காகவே இயேசு வந்து மரித்தார். உங்களை மன்னித்து, நித்திய வாழ்வை அளிக்கவே அவர் உயிர்த்தெழுந்தார்.

**செய்க:**

1) உங்கள் அவமானகரமான விஷயங்களுக்காக நீங்கள் வருந்தி அவற்றை விட்டு விலக வேண்டும்.


2) உங்களை மன்னிக்கவே மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவை நீங்கள் விசுவாசிக்க வேண்டும்.

லூக்கா 23:13-48 லிருந்து இயேசுவின் சிலுவைப்பாடுகளை கூறி அல்லது வாசித்து **கர்த்தரின் பந்தியை** பரிமாறவும்.

**சிறு குழுக்களாக** விசுவாசிகள் பிரிந்து கீழ்க்கண்ட காரியங்களை ஆற்றவும்.

- நண்பர்களும் உறவினர்களும் இரட்சிப்படைய ஜெபிக்கவும்
- அவர்களுக்கு சுவிசேஷத்தை விளக்கும் வழிகளுக்காக ஜெபிக்கவும்.
- அவர்களை எப்போது சந்திக்கலாம் என்பது குறித்து திட்டம் இடவும்.
- மக்கள் கற்று செய்ய வேண்டிய இரு விஷயங்களை சேர்ந்து மனப்பாடம் செய்க (மேலே).


**மனன வசனம் :** லூக். 24:46-48 (சேர்ந்து)




நீண்ட காலங்களுக்கு முன்னர் பரிசுத்தமான மனிதர்கள் கூறிய நேரத்திலும் இடத்திலும் இயேசு மனிதனாக இந்த உலகத்துக்குள் வந்தார்.



நன்மை செய்தும், நோயாளிகளை குணப்படுத்தியும், அசுத்த ஆவிகளை விரட்டியும், மரித்தோரை உயிர்ப்பித்தும் இயேசு தாமே வாக்குத்தத்தம் செய்யப்பட்டவர் என்பதை நிரூபித்தார். தேவனை எவ்வாறு அறிவது என்பதையும் அவர் போதித்தார்.



கொடிய மதத் தலைவர்கள் அவரைக் குற்றவாளியாகத் தீர்த்து, கொடிய அவிசுவாசிகள் அவரை மரச் சிலுவையில் ஆணி அடித்துக் கொன்றனர்.



இயேசுவின் நண்பர்கள் அவரை ஒரு கல்லறையில் அடக்கம் செய்ய அதிகாரிகள் அனுமதித்தனர். ரோம ஆளுநர் மக்கள் நெருங்காதவாறு கல்லறைக்கு இராணுவ வீரர்களைக் கொண்டு காவலிட்டான்.



மூன்று நாட்கள் கழித்து இயேசு உயிரோடு எழுந்து பலருக்குக் காணப்பட்டார். தங்கள் வழிகளை மாற்றுமாறும் எல்லா தீய காரியங்களையும் மன்னித்து நித்தியவாழ்வு பெற அவரை நம்புமாறும், அவர் எல்லா இடங்களிலும் மக்களுக்குக் கூறினார்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net